நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 10

தொகுதி: 113

திருவள்ளுவர் ஆண்டு 2050

திங்கள் இதழ்

விலை: ரூ.20

அக்டோபர் 2019



நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன்	துணைத் தலைவர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	செயலாளர்
திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	உறுப்பினர்
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
பேராசிரியர் இரா.சதாசிவம்	உறுப்பினர்
வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன்	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
வழக்குரைஞர் ச.தசரதராமன்	உறுப்பினர்
திரு. துரை கருணாநிதி	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் ச.தசரதராமன்	தலைவர்
திருமதி. இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	செயலாளர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்
வழக்குரைஞர் து.மாயராசன்	உறுப்பினர்
வழக்குரைஞர் சு.சிவசாமி	உறுப்பினர்
பொறிஞர் லெ.சிவக்குமார்	உறுப்பினர்
வழக்குரைஞர் ஆர்.பாலாஜி	உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம்	உறுப்பினர்
முனைவர். ம.லெல்லிஸ்திவாகர் பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். கி.வேணுகா முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். கோ.சுப்புலெட்சுமி துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். பா.நேருஜி உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. **இதழ் மணம்** - பேராசிரியர் இரா. சதாசிவம் 4
2. **சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா** 6
   - முதுமுனைவர் இரா. இளங்குமரனார்
3. **உந்தும் – உத்தும்** 12
   - பேராசிரியர் இரா. கோதண்டராமன்
4. **காப்பிய உவமைகள் – ஹோமர், மில்டன், சங்கச் சான்றோர்**- பேராசிரியர். ப. மருதநாயகம் 22
5. **இளங்கோவின் உள்ளம்** 38
   - மு. இளங்கோவன்
6. **சங்கச் செய்திகள்** 40

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ.200	ரூ.1,000
ஆயுள்கட்டணம்	ரூ.3,000	ரூ.10,000
புரவலர் கட்டணம்	ரூ.10,000	ரூ.20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ.20	

இதழ் மணம்

பேராசிரியர் இரா.சதாசிவம்

இந்த இதழில் பேராசிரியர் இரா.இளங்குமரனாரின் உள்ளத்தால் "ஓரேர் உழவன்" "ஒக்கல் வாழ்க்கைதட்குமதாலே" என்னும் தொடர்கள் நீளநினைக்குமாறு ஒரு தூண்டலை ஏற்படுத்தி இருக்கிறது.

தமிழ்ச்சமுதாயத்தின் அரசியல், பொருளாதார சமுதாயச்சிந்தனை எதிர்மறைச்சிந்தனையாகவே அமைந்துள்ளது. பெரும்பான்மையாக உள்ள மக்களுக்கு உறுதுணையாக இருந்து பொருளாதார கட்டமைப்பை ஏற்படுத்துவதும் அதன்வழி நலவாழ்வை மக்களுக்கு அளிப்பதும் நாகரிக சமுாயத்தின் சிறப்புக் கோட்பாடாகும். எல்லா மக்களும் உழைத்துப் பொருளீட்டுவதற்குரிய பொருளியல் வழிமுறைகளும் சிரமம் இன்றி வேலைசெய்வதற்குரிய தொழில் வளர்ச்சியும் கட்டமைக்கப்படுவதன் மூலம் மக்கள் வேலை செய்யும் போதும் மகிழ்ச்சியும் உற்பத்தியாரும் பொருளை அனுபவிக்கும் போதும் மகிழ்ச்சி அடைவார்கள். இத்தைகைய பொருளியல் கோட்பாட்டை உருவாக்குவது குடியாட்சி மரபும் பொருளாதார ஏற்றத்தாழ்வைக் குறைத்து எல்லோருக்கும் உடல் நலத்திற்கு ஏற்ற உணவு மற்றபிற வாய்ப்புகளை ஏற்படுத்தி நாட்டை வளப்படுத்தி வல்லரசாக மாற்ற முடியும். ஓரேர் உழவன் அனைந்து பார்த்து போர் விரானங்களை வியக்க வேண்டும் என்னும் பொருளாதார சிந்தனை பழைய நாளில் போர்க்களவேள்வியாகவும் இக்காலத்தில் விளம்பரவேள்வியாகவும் உள்ளன என்றால் மிகை ஆகாது. "ஒக்கல் வாழ்க்கை தட்டுமாகாலே" என்பதும் வேலை செய்யும் வாய்ப்பும் அதனை நேர்மையாக கொண்டு செலுத்துகின்ற கட்டமைப்பும், பொதுவாழ்க்கையில் பொது ஒழுக்கம் இல்லாதபோது நடைமுறை சாத்தியமில்லை, அந்நியர் ஆட்சி மறைந்து ஓராயிரம் ஆண்டுகள் கழிந்த பின்னும் அதிகார வர்க்கத்தின் துரைத்தனம் நீங்கியது பாடில்லை. இந்நாட்டு மக்கள் அந்நியர் ஆட்சியில் துரைத்தனத்தரால் எப்படி அரசுகளால் நடத்தப்பட்டனவோ அதுபோலவே இன்றும நடத்தப்படுகின்றனர். இலக்கியம் படிப்பதற்கு மட்டுமல்ல; அதுவாழ்க்கையின் மேன்மைகளை எடுத்துரைப்பதுமாகும். நம்முடைய கல்விச்சாலைகளும் கற்றவர்களும் தங்களை சமூகத்திலிருந்து வேறுபட்டு நின்று பார்க்கின்ற மனநிலை (psychic structure) மாறும் காலம்தான் இதற்கு வழி வகுக்கும். பேராசிரியர் ப.மருதநாயகம் அவர்கள் கிரேக்க நாட்டு

இலக்கியங்களை எடுத்துரைத்து தமிழ்ச்சங்க இலக்கிய மாண்புகளை நமக்கு உணர்த்தும் திறம் கற்று இன்புறத்தக்கது. கிரேக்க நாட்டுக்காப்பிய ஆசிரியன் கோமர், ஆங்கிலப்பெருங்க விஞன்மில்டன ஆகியோர் பெருங்காப்பியங்களைப் படைத்து இலக்கிய வரலாற்றில் சிந்தனைத்தடம் பதித்துள்ளனர். கிரேக்க நாட்டு சிந்தனைவளம மேலைநாடுகளின் புதிய யுக மாற்றத்திற்கு வித்திட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர். மேம்பாடுடைய காப்பியங்கள் எடுத்தாண்டுள்ள உவமைகளை மேலைநாட்டு அறிஞர்கள் இன்றும் போற்றுகின்றனர். அப்பேரறிஞர்கள் தமிழ் இலக்கிய அறிமுகம் கிடைத்தபின்பு தமிழ் இலக்கிய உத்திகள் உவமையின் வளர்ச்சிநிலையாகிய உள்ளுறை இறைச்சி ஆகியவை கவிதைக்குபுறமாக உவமையாக நிற்காது உரிப்பொருளின் பின்புலமாகிய நிலம் சார்ந்த கருப்பொருளோடு இயைந்து உரிப்பொருளோடு ஒன்றி உள்ளத் உணர்ச்சியை குறிப்புப்பொருளாக உணர்த்தும் தொனி தமிழ் இலக்கியத்தில் மேலோங்கி இருப்பதை அறிந்து வியக்கின்றனர். உள்ளுறை, இறைச்சியின் தாக்கமே வடமொழியில் ஆனந்தவர்த்தனரின் "தொனியர்" கோட்பாடாக அமைந்துள்ளது என்பதும் பிற மொழிகளில் தொனிக்கோட்பாடு தோன்றுவதற்குப் பன்னெடுங்காலத்திற்கு முன்பே தமிழ் இலக்கியத்தில் இக்கோட்பாடு விரிவாக பயன்பாட்டில் இருந்தமை தெளிவாகிறது. தமிழ் இலக்கண இலக்கியத்திற்கு அம்மொழிகள் கடன்பட்டிருக்கின்றன என்பதும் உறுதி. சங்கஇலக்கியத்தில் உவமை பாட்டின் பெரும் பகுதியை ஆட்கொண்டு, கற்பவரின் கற்பனையையும் பொருளின் குறிப்பும் பொருந்நுட்ட உணர்வை மேம்படுத்துவதன் மூலம் கற்பவர்களின் இலக்கிய இன்பம மீதூர்ந்து நிற்க உதவுகிறது. தமிழ் இலக்கண இலக்கிய ஆசிரியர்கள் பாடு பொருளையும் அதன் பின்புலத்தையும் உறுதிபடவும் விரிவாகவும் ஆழ்ந்து சிந்தித்து இலக்கியக் கோட்பாட்டை வகுத்து அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து ஆய்வு மாணவர் மு.இளங்கோவன் "இளங்கோவின உள்ளம்" என்னும் கட்டுரை படைத்துள்ளர். இளங்கோ சமயம் சார்ந்த அடிகளாகாக இருந்தும் உலகப் பொதுமையும் சமயக் கணக்கா மதிவழி சாராது அறக்கோட்பாடுகளை வலியுறுத்துவதையும் மாணவர் மு.இளங்கோவன் தம் கட்டுரையில் எடுத்துரைப்பது சிறந்த பாராட்டுக்குரியதாகும். பேராசிரியர் இவி.சோழண்டராமன் மொழியியல் அறிஞர்; அவர்கள் உந்தும் -உத்தும் என்னும் தலைப்பில மொழிக்கோட்பாடு குறித்த சிந்தனையை வாசகர்களுடன பகிர்ந்துகொள்கிறார். இலக்கண ஆசிரியர்கள் மாணவர்கள் ஆழ்ந்து சிந்திப்பதற்குரிய பொருள் பொதிந்த கட்டுரை.

சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா

முதுமுனைவர். **இரா. இளங்குமரனார்**

5. ஓர்ஏர் உழவர்

புறநானூற்றின் 193-ஆம் பாடலைப் பாடியவர் பெயர் ஓரேருழவர் என்றுள்ளது. ஆனால், அப்பாடலில் ஓரேருழவர் என்ற தொடர் இல்லை. ஒன்னாருழவர் என்று பாடவேறுபாடு காட்டப்பட்டுள்ளது அத்தொடரும் அங்கில்லை. ஆனால் குறுந்தொகை 131-ஆம் பாடலைப் பாடியவர் பெயர் ஓரேருழவனார் என்று காட்டப்பட்டதுடன்,

'ஓர்ஏர் உழவன் போல'

என்ற உவமையும் வந்துள்ளது. அதனால், அப்பாடலைப் பாடியவர் பெயரை அத்தொடர் கொண்டு பெயரிட்டது தகும். அங்கே பாடவேறுபாடு நக்கீரர் என்று காட்டப்பட்டுள்ளது. இதனை ஆய்ந்தால் புலப்படுவது ஒன்றுண்டு. அது, குறுந்தொகைப் பாடல் ஆறு அடிகள்; புறப்பாடல் நான்கு அடிகள்; இப்பத்தடிகளும் இவற்றின் குறிப்பும் ஓரேட்டில் இருந்திருக்க வேண்டும்; ஒரே பக்கத்திலோ, அதன் பின்பக்கம் ஆகிய இரண்டு பக்கங்களிலோ இருந்திருக்க வேண்டும். அல்லது இரண்டு தனித்தனி ஏடுகளில் எழுதிய பாடல்கள் இரண்டும் ஓரிடத்து ஒருங்கே கிடைத்ததாக இருக்க வேண்டும்.

மேலும் தொகை செய்ததில் முன்னது குறுந்தொகை என்பது நன்கு விளக்கமாவது. தொடரால் பெயர் பெற்ற புலவர்களில் பதினைந்து புலவர்கள் குறுந்தொகை வழி அறியப்படுபவர்கள். மற்றை அகத்தில் ஒரு பாடல்; நற்றிணையில் இருபாடல்கள்; புறத்தில் நான்கு பாடல்கள்; ஆக மூன்று தொகைகளிலும் கிடைப்பன ஏழே பாடல்களாம். ஆதலால் குறுந்தொகையே முதல் தொகை என்பது விளக்கமாம்

இவற்றால், **ஓர்ஏர் உழவர்** என்னும் தொடர் வரும் குறுந்தொகையை முன்னே நாம் கூறி, புறப்பாடலைப் பின்னே காணலாம். சங்க இலக்கியப்பதிப்பில் ஓரேருழவர் பெயரில் புறப்பாடல் (193) ஒன்று மட்டுமே உள்ளது.

தலைவன், தான் மேற்கொண்ட வினையை முடிப்பதற்காகப் பிரிந்து சென்றான்; அவன் மீள்வதாகத் தலைவியிடம் குறித்துச் சென்ற

பருவம் வருவது கண்டான்; அப்பருவத்தைக் கண்ட அளவில். சொல்லிவந்தவாறு தவறாமல் தலைவியை அடைய வேண்டுமே என்று விரைந்தான்; அவ்விரைவே இப்பாட்டாகியது.

ஆடமை புரையும் வனப்பிற் பணைத்தோள்
பேரமர்க் கண்ணி இருந்த ஊரே
நெடுஞ்சேண் ஆரிடை யதுவே நெஞ்சே,
ஈரம் பட்ட செவ்விப் பைம் புனத்து
ஓர்ஏர் உழவன் போலப்
பெருவிதுப் புற்றன்றால் நோகோ யானே. ((குறுந்.131.

பொருள்

"அசையும் மூங்கில் போன்ற அழகினையும் திரட்சியையும் உடைய தோளையும் ஒன்றை ஒன்று போரிடுவது போன்ற கண்களையும் உடைய தலைவி இருந்த ஊர் நெடுந்தொலைவும் அடைதற்கு அருமையும் உடையதாம். என் நெஞ்சம், மழைபெய்து குளிர்ந்து உழத்தக்க பருவம் வாய்ந்த பண்பட்ட நிலத்தைப் பதத்தொடு உழுது முடிப்பதற்கு ஒரோஓர் ஏருடைய உழவன் அடைகின்ற விரைவு போலப் பெரு விருப்பும் விரைவும் கொள்கின்றது; யானே வருந்துபவனாக உள்ளேன்" என்பது இதன் பொருளாகும்.

அரும்பொருள்: அமை-மூங்கில்; பணை-திரட்சி; அமர்-போர் அமைந்திருத்தலுமாம்; சேண்-தொலைவு; ஆர்-அருமை; புனம் என்பதால் புன்செய்யாம். மழையைப் பார்த்து உழுது அம்மழை பெய்தலாலேயே விளைவு காணத்தக்க வானம் பார்த்த நிலமாம். விதுப்பு - விரைவு; செவ்வி - பருவம்.

பல ஏர்களை உடையவன் எனில் ஒரே நாளில் பல குறுக்க நிலத்தை உழுது விடலாம். ஓரேருடையவன் பாடு அரும்பாடே.

"ஏரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய் - ஊருக்குச்
சென்றுவர வாய்ப்பாய் இருப்பானும் சொற்கேட்டால்
என்றும் உழவே தலை"

என்பது பிற்காலப் பாடல்.

ஓரேர்க்காரன் படும்பாட்டிலும் ஒரு மாட்டுக்காரன் கூட்டேர் சேர்ந்து ஓட்டுதல் பெரும்பாடாம். வினை மேல் செல்லும் விரைவினும், வினையே நிறைவாக முடிந்து வீடு வர விரும்பும் விரைவு பெரிதாம். தன் தலைவியையே "**வினைமுடித்தன்ன இனியோள்**" என்று நெஞ்சம் நிறைய நினைவது காதல் தலைவன் நிலையாம்.

அதள்எறிந் தன்ன நெடுவெண் களரின்
ஒருவன் ஆட்டும் புல்வாய் போல
ஓடி உய்தலும் கூடுமன்
ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே

என்பது புறம், 193.

திணை - பொதுவியல். துறை - பொருள் மொழிக் காஞ்சி. வாழ்வின் நிலையாமை உணர்ந்து மெய்ப்பொருள் கூறுவது பொருள் மொழிக்காஞ்சி என்னும் துறையதாம். காஞ்சி - நிலையாமை.

பொருள்

ஆடு, மாடு முதலியவற்றின் தோலை உரித்து மேல்பக்கம் கீழ்பக்கம் ஆகுமாறு பரப்பப்பட்டது போன்ற வெண்களர் மண்ணில், ஒரு மானை ஒருவன் பற்ற எண்ணி ஓடுகிறான். மான் எப்படியும் ஓடிப்போகும். ஆனால், அவன் வழுக்கியும் சருக்கியும் உள்குழிந்தும் ஓடித் தப்ப முடியாது. அதுபோல்தான், மனைவி, மக்கள், குடும்பம் என்னும் சுற்றப் பிணைப்பு வெளியேற விடாமல் தடுக்கும் வரை துறவு வாழ்க்கை கொள்ள முடியாது என்பது இதன் தெளிபொருள்

இல்லறம் விட்டுத் துறவறம் செல்ல எண்ணும் எண்ணம், அவ்வில்லப் பிணைப்பாலேயே தடைப்படுகிறது என்பது இதன் கருத்தாகும்.

துறவு வேட்கையன் முதற்கண்ணேயே இல்லறம் கொள்ளத் தவிர்த்தல் அறம். மணம் ஏற்று மனைவி மக்கள் ஆய பின், அவன் துறவு கொண்டு வீட்டில் இருத்தல் முறை. ஓட நினைத்தால் அவன் துறவன் அல்லன். அவன் கொண்டது துறவும் அன்று; அவன் பொழுதுக்கு ஏற்ற போலித்துறவன்;

அவன் மனைவி மக்கள் நிலையென்ன? பெற்றோர் சுற்றம் நிலையென்ன? அவர்களைத் தெருவில் அலமர விட்டுவிட்டு ஓட்டமெடுத்தல் தவமா? அவமா?

தமிழ்த்துறவு அன்று இது. தமிழ்த்துறவு எப்படி?

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்பது தொல்காப்பியம்(1138). மேலும் தொகை செய்ததில் முன்னது குறுந்தொகை என்பது நன்கு விளக்கமாவது. தொடரால் பெயர் பெற்ற புலவர்களில் பதினைந்து புலவர்கள் குறுந்தொகை வழி அறியப்படுபவர்கள். மற்றை அகத்தில் ஒரு பாடல்; நற்றிணையில் இருபாடல்கள்; புறத்தில் நான்கு பாடல்கள்; ஆக மூன்று தொகைகளிலும் கிடைப்பன ஏழே பாடல்களாம். ஆதலால் குறுந்தொகையே முதல் தொகை என்பது விளக்கமாம்

இவற்றால், **ஓர்ஏர் உழவர்** என்னும் தொடர் வரும் குறுந்தொகையை முன்னே நாம் கூறி, புறப்பாடலைப் பின்னே காணலாம். சங்க இலக்கியப்பதிப்பில் ஓரேருழவர் பெயரில் புறப்பாடல் (193) ஒன்று மட்டுமே உள்ளது.

தலைவன், தான் மேற்கொண்ட வினையை முடிப்பதற்காகப் பிரிந்து சென்றான்; அவன் மீள்வதாகத் தலைவியிடம் குறித்துச் சென்ற பருவம் வருவது கண்டான்; அப்பருவத்தைக் கண்ட அளவில், சொல்லிவந்தவாறு தவறாமல் தலைவியை அடைய வேண்டுமே என்று விரைந்தான்; அவ்விரைவே இப்பாட்டாகியது.

ஆடமை புரையும் வனப்பிற் பணைத்தோள்
பேரமர்க் கண்ணி இருந்த ஊரே
நெடுஞ்சேண் ஆரிடை யதுவே நெஞ்சே,
ஈரம் பட்ட செவ்விப் பைம் புனத்து
ஓர்ஏர் உழவன் போலப்
பெருவிதுப் புற்றன்றால் நோகோ யானே. (குறுந்.131)

பொருள்

"அசையும் மூங்கில் போன்ற அழகினையும் திரட்சியையும உடைய தோளையும் ஒன்றை ஒன்று போரிடுவது போன்ற

கண்களையும் உடைய தலைவி இருந்த ஊர் நெடுந்தொலைவும் அடைதற்கு அருமையும் உடையதாம். என் நெஞ்சம், மழைபெய்து குளிர்ந்து உழத்தக்க பருவம் வாய்ந்த பண்பட்ட நிலத்தைப் பதத்தொடு உழுது முடிப்பதற்கு ஒரோஓர் ஏருடைய உழவன் அடைகின்ற விரைவு போலப் பெரு விருப்பும் விரைவும் கொள்கின்றது; யான் வருந்துபவனாக உள்ளேன்" என்பது இதன் பொருளாகும்.

அரும்பொருள்: அமை-மூங்கில்; பணை-திரட்சி; அமர்-போர்; அமைந்திருத்தலுமாம்; சேண்-தொலைவு; ஆர்-அருமை; புனம் என்பதால் புன்செய்யாம். மழையைப் பார்த்து உழுது அம்மழை பெய்தலாலேயே விளைவு காணத்தக்க வானம் பார்த்த நிலமாம். விதுப்பு - விரைவு; செவ்வி - பருவம்.

பல ஏர்களை உடையவன் எனில் ஒரே நாளில் பல குறுக்க நிலத்தை உழுது விடலாம். ஓரேருடையவன் பாடு அரும்பாடே.

"ஏரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய் - ஊருக்குச்
சென்றுவர வாய்ப்பாய் இருப்பானும் சொற்கேட்டால்
என்றும் உழவே தலை"

என்பது பிற்காலப் பாடல்.

ஓரேர்க்காரன் படும்பாட்டிலும் ஒரு மாட்டுக்காரன் கூட்டேர் சேர்ந்து ஓட்டுதல் பெரும்பாடாம். வினை மேல் செல்லும் விரைவினும், வினையே நிறைவாக முடிந்து வீடு வர விரும்பும் விரைவு பெரிதாம். தன் தலைவியையே "**வினைமுடித்தன்ன இனியோள்**" என்று நெஞ்சம் நிறைய நினைவது காதல் தலைவன் நிலையாம்.

அதள்எறிந் தன்ன நெடுவெண் களரின்
ஒருவன் ஆட்டும் புல்வாய் போல
ஓடி உய்தலும் கூடுமன்
ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே

என்பது புறம், 193.

திணை - பொதுவியல். துறை - பொருள் மொழிக் காஞ்சி. வாழ்வின் நிலையாமை உணர்ந்து மெய்ப்பொருள் கூறுவது பொருள மொழிக்காஞ்சி என்னும் துறையதாம். காஞ்சி - நிலையாமை.

பொருள்

ஆடு, மாடு முதலியவற்றின் தோலை உரித்து மேல்பக்கம் கீழ்பக்கம் ஆகுமாறு பரப்பப்பட்டது போன்ற வெண்களர் மண்ணில், ஒரு மானை ஒருவன் பற்ற எண்ணி ஓடுகிறான். மான் எப்படியும் ஓடிப்போகும். ஆனால், அவன் வழுக்கியும் சருக்கியும் உள்குழிந்தும் ஓடித் தப்ப முடியாது. அதுபோல்தான், மனைவி, மக்கள், குடும்பம் என்னும் சுற்றப் பிணைப்பு வெளியேற விடாமல் தடுக்கும் வரை துறவ வாழ்க்கை கொள்ள முடியாது என்பது இதன் தெளிபொருள்

இல்லறம் விட்டுத் துறவறம் செலல எண்ணும் எண்ணம். அவ்வில்லப் பிணைப்பாலேயே தடைப்படுகிறது என்பது இதன கருத்தாகும்.

துறவு வேட்கையன் முதற்கண்ணேயே இல்லறம் கொள்ளத் தவிர்த்தல் அறம். மணம் ஏற்று மனைவி மக்கள் ஆய பின், அவன துறவு கொண்டு வீட்டில் இருத்தல் முறை. ஓட நினைத்தால் அவன் துறவன் அல்லன். அவன் கொண்டது துறவும் அன்று; அவன் பொழுதுக்கு ஏற்ற போலித்துறவன்;

அவன் மனைவி மக்கள் நிலையென்ன? பெற்றோர் சுற்றம நிலையென்ன? அவர்களைத் தெருவில் அலமர விட்டுவிட்டு ஓட்ட மெடுத்தல் தவமா? அவமா?

தமிழ்த்துறவு அன்று இது. தமிழ்த்துறவு எப்படி?

“காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே”

என்பது தொல்காப்பியம் (1138).

உந்தும் உத்தும்

பேராசிரியர் இரா.கோதண்டராமன்,
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வு மையம்,
19, தொல்காப்பியர் தெரு,
அசோக்நகர்,
புதுச்சேரி - 605 008.
கைபேசி - 94431 - 51044

(2) அவைதாம்,

புணரியல் நிலையிடைப் பொருணிலைக்
குதநவும் (=உதவுவனவும்)

வினைசெயன் மருங்கிற் காலமொடு வருநவும்
(=வருவனவும்)

வேற்றுமைப் பொருள் வயின் உருபா குநவும்
(=ஆகுவனவும்)

அசைநிலைக் கிளவி யாகி வருநவும் (=வருவனவும்)

இசைநிறைக் கிளவி யாகி வருநவும் (=வருவனவும்)

தத்தங் குறிப்பிற் பொருள்செய் குநவும் (=செய்குவனவும்)

ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவும் என்று
(=செய்குவனவும்)

அப்பண் பினவே நுவலும் காலை
(தொல்.சொல்.சேனா.250)

மேலே எடுத்துக்காட்டு (4)-இல் நிகழும் *அடுக்குந* (<அடுக்கு-ந்+அ) என்ற பலவின்பால் இறவாக்கால வினைமுற்று முற்றெச்சமாகச் செயல்படுகின்றது. அடுத்து
எடுத்துக்காட்டு (5)-இல் நிகழும் *திரிந* (<திரி-ந்+அ), *உதந* (<உதவு-ந்+அ), *வருந* (<வர்-உந்+அ), *ஆகுந* (<ஆகு-ந்+அ), *செய்குந* (<செய்கு-ந்+அ) ஆகிய பலவின்பால் வினைமுற்றுகளும் *களையுநர்* (<களையுந்+அர்) என்ற பலர்பால் இறவாக்கால வினைமுற்றும்

இறவாக்கால வினையாலணையும் பெயர்களாக செயற்படுகின்றன.

2.4 செயுந் (<செய்-உந்) வாய்பாட்டு இறவாக்காலப் பகுதி உகரம் கெட்டுச் செய்ந் (<செய்-ந்) வாய்பாட்டினவாக ஒடுங்கும் நிலையும் பழந்தமிழில் காணப்படுகிறது. எ-டு *அரிநை* (<அரி-ந்+ஐ) (புறம்.381.20), *களைநர்* (<களை-ந்+அர்) (கலி.58.9, பதி.40.7), அரிநர்(<அரி-ந்+அர்) (அகம்.40.3), *அரிந* (<அரி-ந்+அ) (பொரு.57) ஆகியவை **அரியுநை*, **களையுநர்*, **அரியுநர்*, **அரியுந* ஆகியவற்றின் ஒடுக்கங்களாகும். மேலே (5)-இல் காணப்படும் *திரிந* என்பதும் *திரியுந* (<திரிய்-உந்+அ) என்பதன் ஒடுக்கமாகும்.

2.5 *அறிஞர்* (குறி.18), *களைஞர்* (ஐங்.183.6, கலி.29.25), வலைஞர் (பட்.197) ஆகிய சொற்களின் தோற்றம் ஆய்வுக்குரியதாகும்.[1] இவற்றின் அடிநிலை வடிவங்களில் *-ய்ந்-* என்ற மெய் மயக்கம் காணப்படுகின்றது. இதில் உள்ள யகரம் இடையண்ண இழைபொலியாதலின் அதனை அடுத்து நிகழும் பல்லொலி ஆகிய நகரத்தை இடையண்ண மெல்லொலியாகிய ஞகரமாகத் திரியச் செய்கிறது. இதன் விளைவாக, *-ய்ந்-* என்பது *-ய்ஞ்-* எனத் திரிகிறது. யகரத்தின் முன் அகரம் நிகழ்ந்தால் யகரம் நிலைபெறுவதும் இகரம் நிகழ்ந்தால் யகரம் கெடுவதும் தமிழ் எழுத்தியல் மரபுக்கு ஏற்புடையதாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு மேற்படி சொற்களைப் பின்வருமாறு ஆராயலாம்.

6. *களய்நர் > களய்ஞர் (=களைஞர்)

7. *வலய்நர் > வலய்ஞர் (=வலைஞர்) [2]

8. *அறியுநர்> அறிய்நர் , அறிய்ஞர் , அறிஞர்

3.0 செய்த்து (<*செயுத்து) வாய்பாட்டு இறவாக்காலப் பகுதிகள்

3.1 பழந்தமிழில் நிகழும் *செயுத்து*, *செயுது* வாய்பாட்டு இறவாக்காலப் பகுதிகளின்மீது நிகழும் சிறப்பு வினைமுற்றுக்கள் பின்பழந்தமிழ்க் காலத்தைக் கடந்தும் வழக்கில் காணப்படுகின்றன. *செய்தல்* வாய்பாட்டு வினைகள் இன்றும் வழக்கில் உள்ளன. *செய்த்து* (<செய்த்து <*செய்ந்த்உ) வாய்பாட்டு வினைகளின் அடியாகத் தோன்றிய தன்மைப்

பன்மை, முன்னிலை ஒருமை, முன்னிலைப் பன்மை ஆகிய வினைகளைப் பழந்தமிழிலும் பின்பழந்தமிழிலும் காணலாம்.

தன்மைப் பன்மை வினைகள்

9 (1) உரைத்தும் (சீசி.107,199) (<*உரையுத்தும்) ‘உரைப்போம்’

(2) பிழைத்தும் (சீசி.1234) (<*பிழையுத்தும்) ‘பிழைப்போம்’

(3) தணித்தும் (சீசி.1736) (<*தணியுத்தும்) ‘தணிப்போம்’

(4) விரித்தும் (சீசி.2823) (<*விரியுத்தும்) ‘விரிப்போம்’

(5) இரத்தும் (சீசி.2510) (<*இரயுத்தும்) ‘இரப்போம்’

(6) காத்தும் (சீசி.22) (<*காயுத்தும்) ‘காப்போம்’

(7) கொடுத்தும் (சீசி.1339) (<*கொட்-உத்த்+உம்) ‘கொடுப்போம்’

(8) கேட்டும் (சீசி.1536) (<*கேளுத்தும்) ‘கேட்போம்’

(9)தீர்த்தும் (சீசி.2022) (<*தீருத்தும்) ‘தீர்ப்போம்’

(10) இழத்தும் (குறள்.1250) (<*இழயுத்தும்) ‘இழப்போம்’

3.2 முன்னிலை ஒருமை வினைகள்

10 (1) அலைத்தி (அகம்.125.13) (<*அலையுத்தி) ‘அலைப்பாய்’

(2) அளித்தி (கலி.95.31, பதி.79.3) (<*அளியுத்தி) ‘அளிப்பாய்’

(3) ஒளித்தி (புறம்.8.8) (<*ஒளியுத்தி) ‘ஒளிவாய்’

(4) இறத்தி (புறம்.8.7) (<*இறயுத்தி) ‘இறப்பாய்’(=கடப்பாய்)

(5) ஒத்தி (புறம்.8.6) (<*ஒயுத்தி) ‘ஒப்பாய்’

(6) காத்தி (பரி.6.86) (<*காயுத்தி) ‘காப்பாய்’

(7) பூத்தி (புறம்.242.6) (<*பூயுத்தி) 'பூப்பாய்'

(8) நீத்தி (சீசி.1511) (<*நீயுத்தி) 'நீப்பாய்'

(9) உரைத்தி (சீசி.1585) (<*உரையுத்தி) 'உரைப்பாய்'

(10) கேட்டி (சீசி.2867) (<*கேளுத்தி) 'கேட்பாய்'

(11) கொடுத்தி (குறுந்.362.5) (<*கொட்-உத்த்+இ) 'கொடுப்பாய்'

3.3 முன்னிலைப் பன்மை வினைகள்

11 (1) கேட்டிர் (புறம்.388.10) (<*கேளுத்திர்) 'கேட்பீர்'

(2) மறைத்திர் (குறள்.1318) (<*மறையுத்திர்) 'மறைப்பீர்'

(3) இரத்திர் (நற்.71.3) (<*இரயுத்திர்) 'இரப்பீர்' (=கடப்பீர்)

(4) இறத்திர் (கலி.25.12) (<*இறயுத்திர்) 'இறப்பீர்'

4.0 செயுது வாய்பாட்டு இறவாக்காலப் பகுதிகள்

தன்மைப் பன்மை வினைகள்

(1) அறிதும் (குறு.40.3,நற்.299.6) (<*அறியுதும்) 'அறிவோம்'

(2) மொழிதும் (அகம்.293.13) (<*மொழியுதும்) 'மொழிவோம்'

(3) காண்டும் (புறம்.173.9) (<*காணுதும்) 'காண்போம்'

(4) வருதும் (ஐங்.92.3) (<*வர்-உத்+உம்) 'வருவோம்'

(5) வாழ்தும் (ஐங்.111.4) (<*வாழுதும்) 'வாழ்வோம்'

6) கோடும் (<*கொளுதும்) 'கொள்வோம்'

முன்னிலை ஒருமை, பன்மை வினைகளைப் பனுவல்களில் கண்டு கொள்க. மெல்வினை சார்ந்த இறவாக்காலத் தன்மைப் பன்மை வினைமுற்றுக்களில் காணப்படும் *தும்* என்ற தன்மைப் பன்மை விகுதியானது வல்வினை சார்ந்த இறவாக்காலத் தன்மைப் பன்மை வினைமுற்றுக்களிலிருந்து துண்டித்து, படியெடுக்கப்பட்டு

மெல்வினையையடுத்துப் புணர்த்தப்படுகிறது. இதனை, கொண்டு சேர்த்தல் (Pasting) என்று குறிக்கப்படும். படியெடுத்தல் (Copying) என்பது கொண்டு சேர்த்தலுக்கு முன்பு நிகழ்வதாகும். துண்டித்தல் என்பது தமிழைப் பொருத்தவரை பிறழ்பிரிப்பு (Wrong Segmentation) என்று அறியப்படும். இதன் விளைவாக *அளித்தும்* என்ற தன்மைப் பன்மை இறவாக்கால வல்வினையிலுள்ள *தும்* என்பது *அறிதும்* என்பதில் வினைப்பகுதியையடுத்து சேர்க்கப்படுகிறது. பிறழ்பிரித்தல், படியெடுத்தல், கொண்டுசேர்த்தல் ஆகிய உத்திகள் தமிழ் வினையமைப்புகளில் பரவலாகக் காணப்படுகின்றன. இந்த உத்திகள் பொதுவாக மொழியின் வரலாற்று நிகழ்வுகளைப் பிரதிபலிப்பதாகும். மொழியானது வண்ணனை நிலையில் இதனை ஏற்றுக்கொள்கிறது. மீண்டும் ஓர் எடுத்துக்காட்டாக, செய்தல் வாய்பாட்டு வினைகளைக் குறிப்பிடலாம். செய்தல் வாய்பாட்டு வினைகள் *செய்து+அல்* என்ற அமைப்பினதாகும். இந்த அமைப்பில் செய்து என்பது செயுது என்ற இறவாக்கால வினையின் ஒடுக்கமாகும். வல்வினை சார்ந்த *பறித்தல்* என்ற வினையமைப்பு *தல்* ஈற்று வினையாகக் கருதப்பட்டு மேற்படி விகுதியானது படியெடுக்கப்பட்டு மெல்வினைகளையடுத்து கொண்டு சேர்க்கப்படுகிறது. இதன் விளைவாக *அறிதல்* என்னும் மெல்வினையமைப்பு தோற்றம் கொள்கிறது. மெல்வினை சார்ந்த செய்தல் வாய்பாட்டு வினைகள் பிறழ்பிரித்தல் - படியெடுத்தல் - கொண்டுசேர்த்தல் என்ற உத்தியின் மூலம் தோன்றியவையாகும்.

4.2 செய்தும் வினைகள்

4.2.1 தொல்காப்பியர் தன்மைப் பன்மை விகுதிகளாக **கும், தும், டும், றும்** ஆகிய விகுதிகளைக் குறிப்பிடுவார் (சொல்.சேனா.202). இவற்றுள் **டும், றும்** இரண்டும் **தும்** என்பதன் திரிபாகக் கொள்ளத்தக்கனவாகும். எனவே, **கும், தும்** இரண்டு விகுதிகள்தான் எஞ்சி நிற்பவை. இந்த விகுதிகள் இறவாக்கால வினைகளில் நிகழ்வனவாகும். எடுத்துக்காட்டாக, செய்கும், செய்தும் வாய்பாட்டு வினைகள் **செய்+கும், செய்+தும்** என்று தொல்காப்பிய ஆய்வில் பேசப்படும். இந்த வினைகளில்

காலத்தை உணர்த்தும் விகுதிக்கு இடமில்லை. இது, தொல்காப்பிய ஆய்வில் காணப்படும் ஒரு பின்னடைவாகும். செய்யும் வாய்பாட்டு வினைகளில் **உம்** விகுதி காலத்தையும் முற்றுப்பொருண்மையையும் உணர்த்துவதை இதற்கு ஓர் அமைதியாகக் கருத முடியாது. **கும், தும்** ஆகிய விகுதிகள் **க்+உம், த்+உம்** என்ற அமைப்பினவாகும். இந்த அமைப்பில் ககர மெய்யும் தகரமெய்யும் இறவாக்காலப் பொருண்மையை உணர்த்துவதாகும். இவற்றுள் தகரமெய் இறந்தகாலத்திற்குரியது என்பதாலும் செய்கும் வாய்பாட்டு வினைகள் முற்றெச்சமாக நிகழ்வதாலும் தொல்காப்பியர் **கும்,** தும் ஆகியவற்றையே இறவாக்கால முற்றுவிகுதிகளாகக் கொண்டார் என்று சேனாவரையர் அமைதி காண முயல்வார். ஆனால், இது ஏற்றுக்கொள்ளக்கூடியதன்று. தகரமும் அதன் திரிபாகிய றகர டகரங்களும் இறந்த காலத்திலும் இறவாக்காலத்திலும் காலப்பொருண்மையை உணர்த்துவனவாகும். ஆனால், இவை நிகழும் சொல்லமைப்புகள் முற்றிலும் மாறுபட்டவையாகும்.

4.2.2 நடுவண் திராவிடத்தைச் சேர்ந்த பர்ஜி மொழியில் இறந்தகாலப் பகுதியே எதிர்காலப் பகுதியாகவும் சில வினையமைப்புக்களில் காணப்படுகின்றன. (Burrow & Bhattacharya. 1953:53,55). எ-டு வினைப்பகுதி: **தின், திந்தென்** 'தின்றேன்' **திந்தன்**[3] 'தின்பேன்', வினைப்பகுதி: *பய்* 'பகு'. payt-en[4] 'பகுத்தேன்', payt-an[4] 'பகுப்பேன்'. இது வண்ணனை நிலையில் காணப்படும் அமைப்பியல் மயக்கமாகும். பர்ஜியில் இறந்தகால விகுதியாகவும் எதிர்கால விகுதியாகவும் நிகழ்வது போன்றதுதான் தமிழில் தகர விகுதியும் அதன் திரிபுகளும் இறந்தகால வினைமுற்றுக்களிலும் இறவாக்கால வினைமுற்றுக்களிலும் நிகழ்வது. பர்ஜியில் எதிர்கால விகுதியாக நிகழும் தகரம் செயுந்து வாய்பாட்டு வினைகளில் நிகழும் தகரமாகவும் இறந்தகால விகுதியாக நிகழும் தகரம் தமிழில் இறந்தகால வினைகளில் நிகழும் தகரமாகவும் கொள்ளப்படவேண்டும். பர்ஜியில் **-என், -அன்** ஆகிய தன்மை ஒருமை முற்றுவிகுதிகள் முன்னது இறந்தகாலத்திலும் பின்னது எதிர்காலத்திலும் நிகழ்ந்து குழப்பத்தைத் தவிர்க்கின்றன. அதேபோல், தமிழில் **உம், இ, இர், அல்** ஆகிய முற்றுவிகுதிகள்

அவற்றின்முன் நிகழும் தகரமும் அதன் திரிபுகளும் இறவாக்கால விகுதிகள் என்பதை உறுதிசெய்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டு செய்தும் வாய்பாட்டுத் தன்மைப் பன்மை இறவாக்கால வினைகளை **செய்-த்+உம்** என்ற அமைப்பினவாகக் கொள்வது பொருந்தும். எனவே, சேனாவரையர், தொல்காப்பியரை வழிமொழிவது ஏற்புடையதாகத் தோன்றவில்லை. செய்கும் வாய்பாட்டு வினைகள் முற்றெச்சமாக நிகழும் ஒரே காரணத்தால் அவற்றை **செய்+கும்** எனப் பகுப்பது முறையான அணுகுமுறையாகத் தோன்றவில்லை. முற்றெச்சமாயினும் செய்கும் வாய்பாட்டு வினைகள் வினைமுற்றுக்கள் என்பதை மறுக்கமுடியாது. எனவே இந்த வாய்பாட்டு வினைகளை **செய்+க்+உம்** என்று பகுப்பாய்வு செய்து இந்த அமைப்பில் **உம்** என்பதைத் தன்மைப் பன்மை விகுதியாகக் கொள்வதே ஏற்புடையதாகும். இந்த நிலைப்பாடு, செய்தும் வாய்பாட்டு தன்மை வினைமுற்றுக்களுக்கும் பொருந்தும்.

4.3 முன்னிலை ஒருமை வினைகள்

13 (1) அறிதி (நற்.82.3) (<*அறியுதி) 'அறிவாய்'

(2) என்றி (அகம்.97.5) (<*எனுதி) 'என்பாய்'

(3) வருதி (புறம்.8.8) (<*வர்-உ-த்+இ) 'வருவாய்'

(4) வரைதி (புறம்.8.7) (<*வரையுதி) 'வரைவாய்'

(5) தணிதி (புறம்.10.6) (<*தணியுதி) 'தணிவாய்'

(6) வைகுதி (அகம்.370.6) (<*வைக்-உ-த்+இ) 'வைகுவாய்'

(7) வாழ்தி (பதி.36.16) (<*வாழுதி) 'வாழ்வாய்'

(8) காய்தி (குறள்.1246) (<*காயுதி) 'காய்வாய்'

(9) அகறி (நற்.205.7) (<*அகலுதி) 'அகல்வாய்'

(10) கோறி (<*கொலுதி) 'கொல்வாய்'

(11) முயறி (கலி.17.10) (<*முயலுதி) 'முயல்வாய்'

4.4 முன்னிலைப் பன்மை வினைகள்

14 (1) அகறிர் (நற்.37.7)(<*அகலுதிர்) 'அகல்வீர்'

(2) அறிதிர் (அகம்.8.18)(<*அறியுதிர்) 'அறிவீர்'

(3) என்றிர் (குறு.124.3)(<*எனுதிர்) 'என்பீர்'

(4) வினவுதிர் (கலி.146.12)(<*வினவ்-உத்+இர்) 'வினவுவீர்'

(5) வருதிர் (கலி.143.17)(<*வர்-உத்+இர்) 'வருவீர்'

(6) காண்டிர் (அகம்.76.9)(<*காணுதிர்) 'காண்பீர்'

(7) நகுதிர் (கலி.142.15)(<*நக்-உத்+இர்) 'நகுவீர்'

குறிப்புகள்

1. நன்னூல் உரையாசிரியர்கள் *அறிஞர், களைஞர், வலைஞர்* முதலிய சொற்களில் நிகழும் ஞகரத்தைப் பெயரிடை நிலையாகக் கருதுவர். (நன்னூல்.141) ஆயினும், இறவாக்கால இடைநிலையாகிய **-உந்-** என்பதன் சார்ந்துருபாகிய நகரக் கிளவியின் திரிபு என்பது இங்கே கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

2. பழந்தமிழில் *வல* என்ற வினையடி காணப்படுகிறது. இதன் அடியாகத் தோன்றிய சொற்கள் : *வலந்தன்ன* (பொரு.51), *வலந்தன* (கலி.103.27, நெடு.59), *வலந்தனள்* (நற்.149.4), **வலந்து** (கலி.97.18, பரி.3.17) *வலந்துழி*(பரி.4.13) *நட, கல, மற, பிற* முதலான அகரவீற்று வினையடிகள் **நடய்*(=நடை), **கலய்*(=கலை), **மறய்*(=மறை), **பிறய்*(=பிறை) என மீட்டுருவாக்கம் செய்யத்தக்கனவாகும். இதேபோல், *வல* என்ற அகரவீற்று வினையடியும் **வலய்*(=வலை) என்ற மீட்டுருவாக்கத்திற்கு உரியதாகும். *வலை* என்ற சொல் வினையடியாக நிகழ்ந்து பின்னர் பெயர்நிலைக் கிளவியாகவும் செயல்படத் தொடங்கியது. **வலைஞர்** என்ற சொல் இதனை உறுதிப்படுத்துகிறது.

3. **தின்று** என்ற இறந்தகாலப் பகுதி பர்ஜியில் *திந்து* எனத் திரியும். இந்தப் பகுதி *என்* என்னும் தன்மை ஒருமை விகுதியின்முன் மட்டுமே நிகழும். *திந்து* என்பது *அன்* என்னும் தன்மை ஒருமை விகுதியின்முன் நிகழ்கையில் எதிர்காலப் பகுதியாக அமையும். இந்தப் பகுதி, *தினுந்து* என்ற செயுந்து வாய்பாட்டு வினையாகக் கருதப்படும். இந்த வினையமைப்பு ஒடுங்கி, *திந்து* என அமையும். இந்த அமைப்பில் நிகழும் தகரம் *தினுந்து* என்ற வினையில் நிகழும் *உந்து* என்பதனோடு தொடர்புள்ள இறவாக்கால விகுதியாகும்.

4. *பய்* என்னும் வினையடியாகத் தோன்றிய *பய்த்*- என்ற காலப்பகுதி *என்* என்னும் தன்மை ஒருமையின் முன் இறந்தகாலத்தையும் *அன்* என்னும் தன்மை ஒருமையின் முன் எதிர்காலத்தையும் உணர்த்தும். *பயத்* - என்பதில் நிகழும் தகரம் தமிழில் *வைத்தேன்* என்பதில் நிகழும் இறந்தகால விகுதியோடு தொடர்புடையதாகும். தமிழில், *அளித்தி, அளித்திர், அளித்தல்* ஆகியவை செவ்வியல் தமிழில் இறவாக்கால வினைகளாகும். இந்த வினைகளில் நிகழும் **அளித்-** என்ற இறவாக்காலப் பகுதி ***அளியுத்த்** (<*அளியுந்த்-) என்பதன் ஒடுக்கமாகும். இதில் நிகழும் தகரக் கிளவி இறவாக்கால விகுதியாகும். இந்த விகுதிதான் *payt-an* என்ற எதிர்கால வினைமுற்றில் நிகழ்வதாகும். எதிர்காலப் பகுதியாகிய **பய்த்**-என்பதை ***பயுத்த்-**) (<***பயுந்த்-**) என்ற செயுத்து வாய்பாட்டு இறவாக்கால வினையோடு தொடர்புபடுத்தலாம்.

5. *அறிதி, அறிவிர்* ஆகிய மெல்வினை சார்ந்த இறவாக்கால வினைகள் *அறித்+இ, அறித்+இர்* என்ற அமைப்பின என்பதில் ஐயமில்லை. ஆயினும் இவற்றின் தோற்றம் *அறிதல், அறிதும்* என்பதைப் போன்றதாகும். *பறித்தி, பறித்திர்* ஆகிய வல்வினை முற்றுக்களிலிருந்து *-தி, -திர்* ஆகியவை படியெடுக்கப்பட்டு *அறி* என்னும் மெல்வினைப் பகுதியை அடுத்துக் கொண்டு சேர்க்கப்படுவதன் மூலம் *அறிதி, அறிதிர்* ஆகியவை தோற்றுவிக்கப்படுகின்றன. *இ, இர்* இரண்டும் தனி முன்னிலை ஒருமை, பன்மை விகுதிகளாகத் தமிழில் நிகழ்வதால்

தொல்காப்பியர் -**தி**, -**திர்** ஆகியவற்றை முன்னிலை விகுதிகளாக இனங்காணவில்லை.

சுருக்க விளக்கம்

அகம். - அகநானூறு
சொல். - சொல்லதிகாரம்
இளம். - இளம்பூரணம்
எழுத்து. - எழுத்ததிகாரம்
ஐங். - ஐங்குறுநூறு
பட். - பட்டினப்பாலை
பதி. - பதிற்றுப்பத்து கலி. கலித்தொகை
பரி. - பரிபாடல்
குறள். - திருக்குறள்
புறம். - புறநானூறு
குறி. - குறிஞ்சிப்பாட்டு
குறு. - குறுந்தொகை
மது. - மதுரைக்காஞ்சி
சீசி. - சீவகசிந்தாமணி
தொல். - தொல்காப்பியம்
சேனா. - சேனாவரையம்
நற். - நற்றிணை

கருவிநூல்

Burrow,T. & Bhattacharya,B. 1953. **The Parji Language – A Dravidian Language of Bastar**. Herford: Stephen Austin and Sons Ltd.

காப்பிய உவமைகள் : ஹோமர், மில்டன், சங்கச்சான்றோர்

பேராசிரியர் ப.மருதநாயகம்,
ஆய்வறிஞர்,
நடுவண் அரசு செவ்வியல் தமிழ் நிறுவனம்,
தரமணி, சென்னை — 600 113.

④

உலக இலக்கண நூல்களில் ஒப்பற்றதாகிய தொல்காப்பியம் செய்யுள் பற்றிய இயலோடு உவமம் பற்றிய தனி இயலும் கொண்டுள்ளது. வெளிப்படையான உவமைகளானாலும் உள்ளுறை உவமைகளானாலும் வினை, பயன், மெய், உரு ஆகிய நான்கு பற்றி வரும் என்பார் தொல்காப்பியர். புறநானூற்றிலுள்ள சாத்தந்தையார் பாடல் வினை அடிப்படையில் அரசனையும் கட்டில் வனைவோனையும் ஒப்பிடும்.

சாறு தலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப்
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டில் நிணக்கும் இழிசினன் கையது
போழ் தூண்டு ஊசியின் விரைந்தன்று மாதோ;
ஊர்கொள வந்த பொருநனொடு
ஆர்புனை தெரியல் நெடுந்தகை போரே. (புறம்.82)

ஆறு அடிகளைக் கொண்ட பாடலில் பொருளுக்கு இரண்டு அடிகளும் உவமைக்கு நான்கு அடிகளும் ஒதுக்கப்பட்டிருப்பது குறிப்பிடற்குரியது.

உரு, வண்ண அடிப்படையில் உழுந்தின் வேர் காட்டுக்கோழியின் காலோடு ஒப்பிடப்படும்.

பூழ்க்கா லன்ன செங்கால் உழூந்தின்
ஊழ்ப்படு முதுகாய் உழையினங் கவரும்
அரும்பனி அச்சிரம் தீர்க்கும்
மருந்துபிறி தில்லைஅவர் மணந்த மார்பே.
(குறுந்தொகை 68)

இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டிருந்த சங்கச் சான்றோர் மரம், செடி. கொடிகள், பறவைகள், விலங்குகள் ஆகியவை பற்றிப் பெற்றிருந்த பட்டறிவு உவமைகளில் புலப்படக் காணலாம்.

தொடுவுணர்வும் சுவையும் பல உவமைகளில் ஒப்புமைக் கூறுகளாகும்.

அன்னாய் வாழிவேண் டன்னை நம்படப்பைத்
தேண்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
உவலைக் கூவற் கீழ்
மானுண்டு எஞ்சிய கலிழி நீரே. (ஐங்குறுநூறு 203)

குறிஞ்சி மலர்களிலிருந்து தேன் அடை பெருக்கும் தேனீக்களின் வருணனையில் செயலும் பயனும் இடம்பெறுகின்றன.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு
நட்பே. (குறுந்தொகை 3)

தலைவனொடு தான் கொண்ட நட்பு, நிலத்தினும் பெரிதென்றும் வானினும் உயர்ந்ததென்றும் கடலினும் ஆழமானதென்றும் கூறும் தலைவி அதன் பயனை விளக்கக் குறிஞ்சிப் பூக்களிலிருந்து தேன் உருவாக்கும் வண்டுகளின் செயலைக் குறிப்பிடுகிறாள்.

தமிழில் கவிதைமரபு, வேறெந்தக் கவிதை மரபினும் தொன்மையானதென்பதைத் தமிழ்க் கவிதையில் கையாளப் பெற்ற உவமவுருபுகளின் எண்ணிக்கையாலும் அறியலாம். தொல்காப்பிய உவமயியல் நூற்பா ஒன்று 'அன்ன', 'போல', 'ஒப்ப' 'புரைய' போன்ற முப்பத்தாறு உவமவுருபுகளைப் பட்டியலிட்டு அவைபோன்ற பிறவும் உள என்று முடியும். பெரும் பெயர்க்குரிய உரையாசிரியராகிய பேராசிரியர் மேலும் முப்பது உவமவுருபுகளைச் சுட்டிக்காட்டி அவற்றைப் பயன்படுத்தும் சான்றுப் பாடல்களையும் தருவார். இறுதியில் 'அவைபோன்ற பிறவும் உள' என்று அவர் கூறுவது காணலாம்!

எனவே, கடைச்சங்க காலத்திலேயே, எண்பதுக்கு மேற்பட்ட உவமஉருபுகள் செய்யுள் வழக்கில் இருந்திருக்க வேண்டும். மேலும் வியப்பைத் தரும் செய்தி என்னவென்றால், இவ்வுவமவுருபுகள் பயன்படுத்தப்பெறும் சூழல்கள் வேறு வேறானவையென்று உரையாசிரியர்கள் கூறுவதாகும். மொழிவளம் மிகக் கொண்டதென்று பாராட்டப்பெறும் ஆங்கிலத்தில் 'like', 'as', 'seem', 'appear', 'resemble' போன்ற ஒரு சில சொற்களே பொருளையும் உவமையையும் இணைப்பவை. சேக்ஸ்பியரும் மில்டனும் இவற்றையே மீண்டும் மீண்டும் கையாள்வர்.

⑤

உவமையைச் செய்யுளின் உறுப்பென்று கூறாத தொல்காப்பியர் இறைச்சியையும், உள்ளுறையையும் செய்யுளின் உறுப்புகளென்று சிறப்பிப்பார். பொருளியலில் மூன்று நூற்பாக்கள் இறைச்சியைச் சுருக்கமாக வரையறை செய்யும்.

இறைச்சி தானே உரிப்புறத் ததுவே (1175)
இறைச்சியில் பிறக்கும் பொருளுமார் உளவே
திறத்து இயல் மருங்கின் தெரியு மோர்க்கே. (1176)

அன்புறு தகுவன இறைச்சியுள் சுட்டலும்
வன்புறை ஆகும் வருந்திய பொழுதே. (1177)

தலைவனும் தலைவியும் ஒருவர்பால் ஒருவர் கொண்டுள்ள காதல் உணர்வை மிகைப்படுத்தும் பறவைகளும், விலங்குகளும் கொண்ட காட்சிகள் இறைச்சியில் இடம் பெறும். சங்கச் சான்றோர் பாடல்களில் இறைச்சி, பொருத்தமாக அமைந்து முருகியல் இன்பத்தைக் கூட்டும்.

ஓதலாந்தையாரின் ஐங்குறுநூற்றுப் பாடல் பாலை நிலத்துச் செந்நாய் தனது துணைக்காகக் காட்டுப்பன்றியைக் கொல்லக் காத்துக் கிடப்பதைக் காட்டும்.

வள்ளெயிற்றுச் செந்நாய் வயவுறு பிணவிற்குக்
கள்ளியங் கடத்திடைக் கேழல் பார்க்கும்
வெஞ்சுரக் கவலை நீந்தி
வந்த நெஞ்சம் நீ நயந்தோள் பண்பே.

(ஐங்குறுநூறு 323)

வெஞ்சுரத்தைக் கடந்து வந்த தலைவனுக்குத் தலைவியின் நினைவை இயற்கைக் காட்சியொன்று புலப்படுத்தி, அவன் உள்ளத்தை வாட்டுகின்றது.

பாலைநிலத்துக் கருப்பொருள்களான கள்ளிச் செடியும், காட்டுப் பன்றியும், செந்நாயும் தலைவியிடமிருந்து பிரிந்திருக்கும் தலைவனின் துன்பத்தை விளக்கப் பயன்படும்.

தலைசிறந்த இறைச்சியானது நிலத்திற்கேற்ற கருப் பொருள்களைக் கொண்டு, சூழலுக்கேற்ப அமைந்து உரிப் பொருளைத் தெளிவாக்கும். முல்லை நிலத்தலைவி ஒருத்தி, தன் தலைவன் குறித்த காலத்தில் வந்து சேரவில்லையேயென்று வருந்துகிறாள்.

அவரோ வாரார் முல்லையும் பூத்தன

பறியுடைக் கையர் மறியினத் தொழியப்
பாலொடு வந்து கூழொடு பெயரும்
யாடுடை இடைமகன் சென்னிச்
சூடிய வெல்லாம் சிறு பசு முகையே
(குறுந்தொகை 221)

முல்லைத்திணையின் உரிப்பொருள் இருத்தல்; மலர் முல்லை; நிலம் காடு. இடையரும், ஆடும், மாடும், முல்லை மலரும் காட்சிப் பொருள்களாகித் தலைவனிடமிருந்து பிரிந்து ஆற்றியிருக்கும் தலைவியைத் துன்புறுத்துகின்றன.

௬

பொருளதிகாரத்தின் மூன்று வேறு இடங்களில் உள்ளுறை வரையறை செய்யப்பெறுகிறது. உள்ளுறை உவமைக்கும் ஏனை உவமைக்குமுள்ள வேறுபாடு 'அகத்திணையியலில்' புலப்படுகிறது.

உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்
தள்ளாது ஆகும் திணைஉணர் வகையே.(992)
உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம்எனக்
கொள்ளும் என்ப குறிஅறிந் தோரே.(993)
உள்ளுறுத்து இதனொடு ஒத்துப் பொருள் முடிகஎன
உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்(994)
ஏனை உவமம் தான்உணர் வகைத்தே (995)
'உவமயியலும்' இருவகை உவமைகள்
பற்றியும் பேசுகிறது.
பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்ன மரபின் கூறும் காலைத்
துணிவொடு வரூஉம் துணிவினோர் கொளினே
(1244)
(உள்ளுறை உவமையில் பொருளுக்கும் உவமைக்கும்

உள்ள ஒற்றுமைக் கூறுகள் வெளிப்படச் சொல்லப் படாமையாலும், ஆனால் புலவரால் மரபின் வழி சொல்லப்படுதலானும், பொருளறிய வல்லோர்கள் உவமையின் பொருத்தத்தைத் தெரிந்து கொள்வர்.

உவமப் போலி ஐந்தென மொழிப.(1245)
தவலரும் சிறப்பின் அத்தன்மை நாடின்
வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும
பிறப்பினும் வரூஉம் திறத்தியல் என்ப.(1246)

மேலும் ஐந்து நூற்பாக்கள் 'பொருளியலில்' ஐந்து வகை உள்ளுறைகளைச் சுட்டுகின்றன.

வாயிற்கிளவி வெளிப்படக் கிளத்தல்
தாஇன்று உரிய தத்தம் கூற்றே.(1187)
உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பு எனக்
கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே(1188)
அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே.(1189)
மங்கல மொழியும் வைஇய மொழியும்
மாறுஇல் ஆண்மையின் சொல்லிய மொழியும்
கூறிய மருங்கின் கொள்ளும் என்ப(1190)
சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு
அனைநால் வகையும் சிறப்பொடு வருமே.(1191)

⑦

உள்ளுறையின் தனித்தன்மையையும் பயனையும் ஏ.கே.இராமானுசன் தெளிவாக்குவார்.

1. நிலம், நிலத்தின் கருப்பொருள்கள் ஆகியவற்றை உரிப் பொருளோடு இணைத்துக்காட்டுவது உள்ளுறை.

2. உரைநடையில் வரும் உருவகம் போலல்லாமல், உள்ளுறை, கவிதையின் அமைப்புக் கூறுகளில் ஒன்றாகிவிடுகிறது. அது கவிதையின் பல கூறுகளையும் ஒருங்கிணைத்துச் செய்யுள் கூறும் செய்திக்கு உருவம் அளிக்கிறது.

3. உவமையும் உருவகமும் போலல்லாமல், உள்ளுறையானது ஒப்பீட்டுக் கூறுகளையும், உவமவுருபுகளையும் விலக்கி விடுகிறது. இவ்வாறு விலக்குதல் உவமையின் ஆற்றலைப் பன்மடங்கு உயர்த்துகிறது.

4. உள்ளுறை, அடிப்படையில் ஓர் ஆகுபெயரே (metonymy); அதில் குறிப்பானும் குறிக்கப்படும் பொருளும் ஒருலகத்தைச் சார்ந்தவை, ஒரே நிலத்திலிருந்து பெறப்பட்டவை; இரண்டும் ஒரு காட்சியின் பகுதிகள். இத்தகைய ஆகுபெயரே, உருவகத்தைக் காட்டிலும் சங்கச் சான்றோர்க்கு மிகவும் பிடித்தமான அணியாகும்.

உள்ளுறையில் ஆகுபெயரும் உருவகமும் இணைந்து செயல்படுவதால் அதனை இராமானுசன் 'metonymous metaphor' என்றே அழைப்பார். ரோமன் யாகப்சன் என்ற ருசிய வடிவியலார் 'ஆகுபெயரும் உருவகமும் ஒன்றோடொன்று இணையாத இரு துருவங்கள்' என்று கூறியுள்ளதை மறுத்து, இராமானுசன் உள்ளுறையில் அவை அழகுற இணைந்து செயல்படும் திறத்தை எடுத்துக் காட்டுவார்.

உள்ளுறைவுவமத்தில் பொருத்தம் கருதித் தேர்ந்தெடுக்கப்பட்ட கருப்பொருள்கள் நீண்ட, செறிவான உவமைக்கு வழி செய்கின்றன. ஓர் ஐங்குறுநூற்றுப் பாடலில் தலைவியொருத்தி தனது கணவனின் கொடிய செயலை எண்ணி உள்ளம் வெதும்புகிறாள்.

கரைசேர் வேழம் கரும்பில் பூக்கும்
துறைகேழ் ஊரன் கொடுமை நன்றும்
ஆற்றுக தில்ல யாமே
தோற்க தில்ல என் தடமென் தோளே. (ஐங்குறுநூறு 12)

உள்ளுறை உவமம் மூலமாகத் தலைவனின் கொடுஞ்செயல் மறைமுகமாகச் சுட்டப்பெறுகிறது. அவனது வயல்களில், பொய்க்கரும்புகள் நல்லனபோல் பூக்கின்றன; எனவே, இருவகைக் கரும்புகளும் ஒரு வகையாக எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன. தலைவன் தனது உள்ளத்தில், அவனது நற்கரும்பையொத்த காதலிக்கும் பொய்க் கரும்பையொத்த பரத்தையர்க்கும் வேறுபாடின்றி ஒரே இடத்தைத் தந்துள்ளான்.

உள்ளுறை உவமைகளில் இத்தகைய ஒன்றுக்கொன்றான தொடர்பைக் (one-to-one correspondence) காணலாம். பொருள் பொதிந்த இத்தகைய நீண்ட உள்ளுறை உவமைகள் குறுந்தொகைப் பாடல்களில் உண்டு.

ஒன்றேன் அல்லென் ஒன்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தல் பெய்ம்மார்
நின்றுகொய மலரும் நாடனொடு
ஒன்றேன் தோழி ஒன்றி னானே
(குறுந்தொகை 208)

எந்தவொன்றில் மட்டும் தலைவனிடமிருந்து தலைவி வேறுபடுகிறாளென்பதைப் பாடலில் வரும் உள்ளுறையிலிருந்து நாம் ஊகித்தறியலாம். பொறுப்பற்ற யானையால் வீழ்த்தப்பட்ட வேங்கை மரம் கீழே சாய்ந்த பின்னும் பூக்கிறது. எனவே, குறிஞ்சி நிலத்து இளம்பெண்கள் அதன் கிளைகளில் உள்ள பூக்களை எளிதில் பறித்து விடுகின்றனர். அவளோடு உடலுறவு

கொண்ட தலைவன் இப்பொழுது திருமணத்திற்குக் காலம் தாழ்த்துவதால் அவளைப் பற்றிய அலர் பரவலாகி வருகிறது என்பதை உணராமல் இருக்கின்றானே என்பதே அவளை வாட்டும் துன்பம் ஆகும்.

சுட்டு உள்ளுறையில் மறைபொருள் ஒருவாறு சுட்டப்பெறுதலைக் காணலாம்.

பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொண்மூ
இருண்டுஉயர் விசும்பின் வலன்ஏர்பு வளைஇப்
போர்ப்புஉறு முரசின் இரங்கி முறைபுரிந்து
அறன்நெறி பிழையாத் திறன்அறி மன்னர்
அருஞ்சமத்து எதிர்ந்த பெருஞ்செய் ஆடவர்
கழித்துஎறி வாளின், அளிப்பன விளங்கும்
மின்னுடைக் கருவியை ஆகி, நாளும்
கொன்னே செய்தியோ, அரவம்? பொன்னென
மலர்ந்த வேங்கை மலிதொடர் அடைச்சிப்
பொலிந்த ஆயமொடு காண்தக இயலித்
தழலை வாங்கியும் தட்டை ஓப்பியும்
அழலேர் செயலை அம்தழை அசைஇயும்
குறமகள் காக்கும் ஏனல்
புறமும் தருதியோ? வாழிய மழையே

(அகநானூறு 188)

தோழியொருத்தி இடியுடன் கூடிய மேகத்தைக் கேட்கிறாள்: நீ கடலிலிருந்து நீரை மொண்டு கொண்டு, மேலே சென்று, போர்முரசென இடித்து, நேர்மையும் தகுதியும் உடைய மன்னர்களால் பகைவரைத் தாக்குதற்கு உறையிலிருந்து உருவப்பட்ட வாள்களைப் போல் மின்னி, இறுதியில் ஒரு பயனுமின்றி முடியப் போகிறாயா? அல்லது செயலை இலையும் வேங்கை மலரும் அணிந்து தோழிகளுடன் அழகாக நடமாடி ஒலியாலும் கல்லாலும்

பறவைகளை விரட்டி இளம்பெண்களால் பாதுகாக்கப்பெறும் தினைப்புனத்தில் மழையாகப் பொழிந்து அப்பயிரைக் காக்கப் போகிறாயா?

இப்பாடலில் விளிக்கப்படுவது மேகமாயினும் சிறைப்புறத்தானாகிய தலைவனுக்கே செய்தி சொல்லப்படுகிறது. சுட்டு உள்ளுறையில், மேகம் பற்றியும் குறிஞ்சிப் பெண்கள் பற்றியும் இரண்டு சொல் ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கக் காணலாம். தலைவன் அலர் தொடர்வதை அனுமதிக்கப்போகிறானா, அல்லது தலைவியை மணந்து அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்போகிறானா என்பதே தோழியின் கேள்வி.

வடமொழியும் தமிழும் நன்கறிந்த அமெரிக்கக் கல்வியாளராகிய ஜார்ஜ் ஹார்ட் வடமொழியாளர் போற்றும் தொனிக்கோட்பாடு, தமிழ் இறைச்சி, உள்ளுறை ஆகியவற்றில் இருந்து பெறப்பட்டதே என்பதை சான்றுகளுடன் நிறுவுவார். சமஸ்கிருத, பிராகிருத இலக்கியங்களில் இவ்வுத்தி கையாளப்படுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கும் முன்னமேயே தமிழ் இலக்கண நூல் இதுபற்றிப் பேசி இருப்பதை அன்னார் புலப்படுத்துவார். ஆனந்தவர்த்தனர், தம்முடைய காதல் கவிதைகளில் கடைப்பிடிக்கப்படவேண்டிய ஒழுங்கு, கட்டுப்பாடு பற்றிப் பேசும்போதும் காதலர் புணர்தல், பிரிதல் பற்றி விளக்கும்போதும், தொனி என்னும் உத்தி ஒரு பாடலில் இடம்பெற்றிருப்பதை அரிய கல்வி அறிவு பெற்றோரே அறிந்து போற்ற முடியும் என்று வலியுறுத்தும்போதும் அவர் இறைச்சி, உள்ளுறை ஆகிய தமிழ்க் கோட்பாடுகளை நன்கு அறிந்திருக்க வேண்டுமென்பது புலனாகிறது.

⑧

மேலைத்திறனாய்வாளர் போற்றும் ஹோமரும், மில்டனும் கையாண்ட காப்பிய உவமைகளை ஒத்த சிறப்புடையவை, சான்றாகிப் புலப்படுத்தல், அணிசெய்தல்,

மிகைப்படுத்திக் காட்டல் (aggrandizement) பின்வருவதைக் குறிப்பால் உணர்த்தல் (prolepsis) ஆகிய நான்கு பணிகளையும் திறம்படச் செய்பவை ஆகிய பலவும் சங்க அகப்புறப்பாடல்களில் மலிந்து கிடப்பதை அவற்றை ஆழ்ந்து கற்போர் உணரலாம்.

வரைவுமறுக்கப்பட்டு ஆற்றானாகிய தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியதாக வரும் பரணரின் குறிஞ்சித் திணைப் பாடல்:

நிலந்தாழ் மருங்கில் தெண்கடல் மேய்ந்த
விலங்கு மென்தூவிச் செங்கால் அன்னம்
பொன்படு நெடுங்கோட்டு இமயத்து உச்சி
வானர மகளிர்க்கு மேவல் ஆகும்
வளராப் பார்ப்பிற்கு அலகு இரை ஒய்யும்
அசைவில் நோன்பறை போலச் செலவர
வருந்தினை வாழியென் உள்ளம் ஒருநாள்
காதலி உழையள் ஆக
குணக்குத் தோன்று வெள்ளியின் எமக்கும்ஆர்
வருமே. (நற்றிணை 356)

தலைவன், "என் உள்ளமே! அன்னப்பறவை இமயத்து உச்சியில் அரமகளிர் கைப்பட்ட தன் பார்ப்புகளுக்குக் கடலகத்துள்ள இரையைக் கொண்டு செல்லும் பொழுது அவற்றின் வலிய சிறகு வருந்தினாற் போலப் பலகாலும் என்பால் நின்றும் அவள்பால் ஏகுதலால் நீ வருந்தினாய்" என்று கூறும்போது உள்ளம் என்னும் நுண்பொருளுக்கு அன்னத்தின் வலிய சிறகு என்னும் பருப்பொருள் உவமையாகிறது. ஒன்பது வரிப்பாடலில் அன்னம் பற்றிய செய்தி ஆறு வரிகளில் சொல்லப்படுவதைக் காணலாம்.

பதிற்றுப்பத்தின் ஐம்பத்தொன்பதாம் பாடல், மன்னன் ஒருவனின் அறச்செயல் ஞாயிறு இருள் நீக்கி ஒளி செய்வதற்கு ஒப்பிடப் பெறுகிறது. அஞ்ஞாயிறு எத்தகையது?

பகல் நீடாகாது இரவுப்பொழுது பெருகி
மாசி நின்ற மாகூர் திங்கள்
பனிச்சுரம் படரும் பாண்மகன் உவப்பப்
புல்இருள் விடியப் புலம்புசேண் அகலப்
பாயிருள் நீங்கப் பல்கதிர் பரப்பி
ஞாயிறு குணமுதல் தோன்றியா அங்கு

(மாசித்திங்களில் பகற்பொழுது குறைய, இரவுப்பொழுது பெருகும்; விலங்குகள் குளிர்தாங்காது பனியால் துன்புறும்; சுரத்தைக் கடக்கும் பாணன் அல்லலுறுவான். இவர்களுடைய துன்பத்தையெல்லாம் போக்கும் வண்ணம், கொடிய இரவிற்கு முடிவு தந்து, தன் கதிர்களைப் பரப்பிக் கீழ்த்திசையில் ஞாயிறு தோற்றம் தரும்.

பதிற்றுப்பத்தின் அறுபத்தாறாம் பாடலில் படைவீரர் அணிந்துள்ள மாலைகளின் வருணனை பல செய்திகளை உள்ளடக்கி நீண்டு செல்லும்.

தோல்மிசைத்து எழுதரும் விரிந்து இலங்கு எஃகின்
தார்புரிந் தன்ன வாள்உடை விழவின்
போர்படு மள்ளர் போந்தொடு தொடுத்த
கடவுள் வாகைத் துய்வீ ஏய்ப்பப்
பூத்த முல்லை புதல்சூழ் பறவை
கடத்திடைப் பிடவின் தொடைக்குலைச் சேக்கும்
வான்பளிங்கு விரைஇய செம்பரல் முரம்பின்
இலங்கு கதிர்த் திருமணி பெறூஉம்
அகன்கண் வைப்பின் நாடு கிழவோனே.

மன்னனின் படைவீரர்கள் தங்களுடைய வேல்களைக் கேடயங்களுக்கு மேல் தூக்கியிருப்பது, ஒரு மலையின் சிகரங்களில் மிதந்து செல்லும் பருவ மழைக்குரிய மேகங்களைப் போன்று காட்சியளித்தது. அன்னாரால் சுழற்றப்பட்ட வாள்கள் மார்பில் அசைந்தாடும் மாலைகளை

ஒத்திருந்தன. அவ்வீரர்களுக்குப் போர் ஒரு திருவிழாவாகும். அம்மாலைகளில் வெண்ணிறப் பனம்பூக்களும் வெற்றித் தெய்வத்தின் வழிபாட்டுக்குரிய வாகை மலர்களும் பிணைக்கப்பட்டிருந்தன. அவற்றை நினைவூட்டும் முல்லைப் புதர்களை மொய்க்கும் வண்டுகள் காட்டிலுள்ள பிடவ மரங்களில் பூத்துக் குலுங்கும் மலர்க்கொத்துகளுக்குப் பறந்து செல்கின்றன.

வீரர்களின் வேல், கேடயம், வாள், மாலை ஆகியவற்றிற்குச் சொல்லப்படும் வெவ்வேறு உவமைகள் அழகாக இணைக்கப்படக் காணலாம். பதிற்றுப்பத்தின் அறுபத்தேழாம் பாடலில்,

> வாள்முகம் பொறித்த மாண்வரி யாக்கையர்
> நெறிபடு மருப்பின் இரும்கண் மூரியொடு
> வளைதலை மாத்த தாழ்கரும் பாசவர்
> எஃகு ஆடு ஊனம் கடுப்ப மெய் சிதைந்து
> சாந்து எழில் மறைத்த சான்றோர் பெருமகன்

என்று சேர மன்னன் பாராட்டப்பெறும்போது அவனது படைவீரர்கள் எத்தகையவர் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் பெற்ற போர்க்காயங்கள் சந்தனக்குழம்பு தோய்ந்த மார்பின் அழகை மறைக்கின்றன. அம்மார்புகள் ஊன்விற்போர் எஃகுக்கத்திகளால் பெரிய கண்களையும் விரிந்த கொம்புகளையும் உடைய காளைகளையும் வளைந்த கழுத்தையுடைய பிற விலங்குகளையும் வெட்டுவதற்குப் பயன்படுத்தும் மரப்பலகைகளை ஒத்திருக்கின்றன. புண்பட்ட மார்பிற்குப் பொருத்தமான உவமையாகும் மரப்பலகை, விலங்கை வெட்டும் கத்திகளால் பட்டுள்ள வெட்டுகளை நினைவூட்டுமாறு ஒரு தனி ஓவியமாகத் தரப்படுகின்றது.

பதிற்றுப்பத்தின் எழுபத்தோராம் பாடலில் இடம்பெறும் இரண்டு உவமைகள் நம்மை எளிதில் கவர்பவை. அவற்றுள்

முதலது நீண்ட காப்பிய உவமை; இரண்டாவது சுருங்கிய சிறப்புடையது.

அறாஅ யாணர் அகன்கண் செறுவின்
அருவி ஆம்பல் நெய்தலோடு அரிந்து
செறுவினை மகளிர் மலிந்த வெக்கைப்
பரூஉப் பகடு உதிர்த்த மென் செந்நெல்லின்
அம்பண அளவை உறைகுவித் தாங்குக்
கடுந்தேறு உறுகிளை மொசிந்தன துஞ்சும்
செழுங்கூடு கிளைத்த இளம்துணை மகாரின்
அலந்தனர் பெருமநின் உடற்றி யோரே

....

அருஞ்சமத்து அருநிலை தாங்கிய புகர்நுதல்
பெரும்களிற்று யானையோடு அரும் கலம்
தரா அர்
மெய்பணி கூரா அணங்குஎனப் பராவலின்
பலிகொண்டு பெயரும் பாசம் போலத்
திறைகொண்டு பெயர்தி

பெருவளம் பெற்ற வயலில் அறுவடை செய்யும் மகளிர் செந்நெல்லோடு ஆம்பலையும் நெய்தலையும் அரிகின்றனர் பருத்த எருமைகளைக் கொண்டு நெல்மணிகள் பிணையடிக்கப் படுகின்றன. பெரும் நெற்குவியல்களை அளக்கப் பயன்படும் முகவைகள் மரக்கிளைகளில் தொங்கும் தேன்கூடுகளை மொய்த்திருக்கும் தேனீக்களாய்க் காட்சி தருகின்றன. உன்னுடைய படைவீரர்களால் தாக்கப்படும் பகைவர்கள் தேன் கூடுகளைக் கலைக்கும் சிறுவர்கள் தேனீக்களால் தாக்கப்பட்டுத் துன்புறுவதுபோல் துன்புற்றனர்.

நீ போரிட்ட சிற்றரசர்கள் உனக்கு அஞ்சி களிறுகளையும் விலையுயர்ந்த அணிகலன்களையும்

அளித்தனர். போற்றி வணங்கப்பட்ட அணங்கானது பலியினை ஏற்று அகல்வது போல் நீ அப்பரிசில்களை ஏற்று வேறிடம் சென்றாய்.

பதிற்றுப்பத்தின் எழுபத்தேழாம் பாடல் களிறுகளை ஆநிரைகளோடு ஒப்பிடுவதோடு அமையாது அவ் ஆநிரைகளின் மேய்ச்சல் பற்றிய ஓவியம் ஒன்றையும் தீட்டுகிறது.

கந்துகோள் ஈயாது காழ்பல முருக்கி
உகக்கும் பருந்தின் நிலத்து நிழல் சாடிச்
சேண்பரல் முரம்பின் ஈர்ம்படைக் கொங்கர்
ஆபரந் தன்ன செலவின்பல்
யானை காண்பல் அவன்தானை யானே.

அரசனுடைய களிறுகள் தூண்களில் பிணிக்கப்பட்டிருப்பதை விரும்பாதவையாய் யானைப்பாகர்களின் தார்க்கோல்களைச் சிதைக்கின்றன; மேலே பறந்து செல்லும் பருந்துகளின் நிழல்களைத் தரையில் கண்டு அவற்றைத் தாக்குகின்றன. அவை, கொங்கு நிலத்தில் இடையர்களால் மேய்ச்சலுக்கு விடப்பட்ட ஆநிரைகள் போன்று அளவற்ற எண்ணிக்கை கொண்டவை.

பொருள், உவமை ஆகிய இரண்டும் பற்றிய சில செய்திகளை நம்மை ஈர்க்கும் வகையில் சொல்லிச் செல்வது நோக்கற்பாலது.

எழுபத்தொன்பதாம் பாடலில் புலவர் ஒருவர் சேர மன்னனின் புகழ் அயிரை மலை போன்று நீடூழி வாழ வேண்டும் என்று கூறி அயிரை மலையில் குடிகொண்டிருக்கும் தெய்வம் பற்றிப் பேசுகிறார்.

வெல்போர் வேந்தர் முரசுகண் போழ்ந்துஅவர்
அரசு உவா அழைப்பக் கோடு அறுத்து இயற்றிய
அணங்குடை மரபின் கட்டில்மேல் இருந்து

துமபை சான்ற மெய்தயங்கு உயக்கத்து
நிறம்படு குருதி புறம்படின் அல்லது
மடைஎதிர் கொள்ளா அஞ்சுவரு மரபின்
கடவுள் அயிரையின் நிலைஇக்
கேடில ஆக பெருமநின் புகழே.

உனக்குக் கட்டுப்படாத மன்னர்களோடு போர்மேற்கொண்டு அவர்களுடைய முரசங்களைச் சிதைத்தாய். அன்னாரின் யானைக் கோடுகளை அறுத்து அவற்றாலான கட்டிலொன்றும் செய்யப்பட்டது. உனது புகழ் அயிரை மலைபோல் நிலைத்து நீடித்திருப்பதாக! அந்த மலையில் அமர்ந்திருக்கும் அச்சத்தையூட்டும் போர்த்தெய்வமானது தும்பைப்போர் செய்யும் வீரர்களின் நெஞ்சிலிருந்து கொட்டும் குருதி தவிர வேறு பலியை ஏற்றுக் கொள்ளாததாகும்.

சேர வேந்தனின் புகழ் அயிரை மலையையொத்து நீடிக்க வேண்டும் என்று வாழ்த்தும் புலவர் அவன் அயிரை மலைத்தெய்வம்போல் பகைவரால் அஞ்சத்தக்கவன் என்று குறிப்பால் உணர்த்துகிறார்.

வெற்றிப் பெருமிதமுடைய சேரமன்னனின் போர்ப் பாசறை கண்டு உவகை கொள்ளும் புலவர் எண்பத்து நான்காம் பாடலில் எழும் ஒலியானது பறவைகள் எழுப்பும் ஒலியைப்போல் இனிமையானது என்பார்.

காஞ்சி சான்ற செருப்பல செய்துநின்
குவவுக்குரை இருக்கை இனிது கண்டிகுமே
காலை மாரிபெய்து தொழில் ஆற்றி
விண்டு முன்னிய புயல்நெடும் காலைக்
கல்சேர்பு மாமழை தலைஇப்
பல்குரல் புள்ளின் ஒலிஎழுந்தாங்கே.

தொடர்ச்சி அடுத்த இதழில்

இளங்கோவின் உள்ளம்

மு.இளங்கோவன்,
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்),
தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க்கல்லூரி மதுரை -1.

முன்னுரை

இளங்கோவின் உள்ளத்தை அறிவதற்கு அகப்பட்ட கருவி சிலப்பதிகாரமாகும். ஒரு சமயத்தைச் சார்ந்தவர், பிற சமயங்களையும் பிற தெய்வங்களையும் போற்றுதல் அரிது. சமணம் சார்ந்த மக்களைக் கொண்டு காப்பியம் படைத்த இளங்கோவடிகள், பிற சமயங்களைப் புகழும் உள்ளம் உடையவராக உள்ளார். அது மட்டுமன்றி, அவற்றைப் பழிக்காமல் காப்பியம் படைத்தப் பண்பாளராகவும் உள்ளார். இளங்கோவின் உள்ளம் பொழுதுபோக்கிற்காகக் காப்பியம் படைக்கவில்லை. அது, கற்போரின் உள்ளத்தில், தாம் உணர்ந்த உண்மைகளைப் பெருகச்செய்து உயர்ந்தோராக உருவாக்க விரும்பியது. அத்தகைய உயர்ந்த உள்ளத்தைச் சிலப்பதிகாரம் வழி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இளங்கோவின் உள்ளம்

வீரம் நிறைந்த ஆடவர்க்குக் கல் எடுப்பது தமிழ் மரபாகும். மறக்குடியில் பிறக்காது அறக்குடியில் பிறந்த கண்ணகி, இமயத்தில் கல் எடுப்பதற்கு உரியவள் ஆனாள். தொல்காப்பியர்,

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று
இரு மூன்று மரபிற் கல்லொடு புணர"

என்று (பொருள். புறத். நூ.5) வீரனின் கல் எடுப்பிற்கானத் துறைகளைக் கூறுகின்றார். இத்துறைகளை இளங்கோவின் உள்ளம் வஞ்சிக் காண்டத்தின் காதைப் பெயர்களாக; காட்சிக் காதை, கால்கோள் காதை, நீர்ப்படைக் காதை, நடுகல் காதை, வாழ்த்துக் காதை என மாற்றியமைத்துச் சிறப்பிக்கின்றது.

தமிழ் நாடு என்னும் உள்ளம்

"மனிதர் யாரும் பண்போடு, பிறருக்குப் பயன்படும் நெறியோடு, உயிருக்கும் அஞ்சாது நீதிக்குப் போராடும் உணர்வோடு வாழ்ந்தால் அவரையே மாநிலம் தெய்வமாகக் கொண்டாட வேண்டும்" (சிலப்பதிகாரத் திறனாய்வு, ம.பொ.சிவஞானம், ப.6) என்ற உண்மையைக் கண்ணகி மூலம் நமக்கு இளங்கோவடிகள் தம் உள்ளத்தின் வெளிப்பாடாக எடுத்துரைக்கின்றார். மேலும் தமிழ்ச் சமுதாயத்தின் நல்வினைப் பயன் காரணமாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டத் தமிழகத்தின் செழிப்பையும், வரலாற்றுப் பின்னணியையும் நமக்குப் படம் பிடித்துக் காட்டும் சாசனமாக ஒரு காவிய மாளிகையைச் சமைத்துத் தந்தவர் இளங்கோவடிகள்.

இளங்கோவின் காலத்தில் சேர, சோழர், பாண்டி நாடுகள் எனத் தமிழ்நாடு மூன்றாக இருந்தது. இம்மூன்றும் ஒன்றுபட்டுத் 'தமிழ்நாடு' என விளங்க இளங்கோவின் உள்ளம் விரும்பியது. இமயமலை உச்சியில், பாண்டியனின் மீன் சின்னமும் விளங்க வேண்டும் என விரும்பிய இளங்கோவின் உள்ளத்தை,

"கயல் எழுதிய இமய நெற்றியின்
அயல் எழுதிய புலியும் வில்லும்"

எனும் (17: 1,2) அடிகளில் காணலாம். இது மட்டுமல்லாது, இமயம் முதல் குமரி வரையுள்ள பரந்த உலகத்தையும் தமிழ்நாடாகக் காணும் உள்ளத்தை, 'இமிழ் கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கி' எனும் (25:165) அடியில் காணலாம்.

காப்பியம் சமைத்த அடிகளும், கேட்ட புலவரும் ஆகிய இருவருள் ஒருவர் எழுதினார் என்பதிலும் காப்பியத்தில் உள்ளம் தோய்ந்த, இளங்கோ அடிகளின் உள்ளம் அறிந்த பிறிதொருவர் நூலுக்குப் பதிகமாக இதனை அமைத்தார் எனக் கொள்ளலே ஏற்புடையதாக அமையலாம்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

சங்கச் செய்திகள்

04.09.2019 அன்று முற்பகல் 10.00 மணியளவில் ஆசிரியர் தினவிழா கல்லூரி வைரவிழா அரங்கில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் தலைமை தாங்கினார். துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். உதவிப் பேராசிரியர்கள், மற்றும் அலுவலர்கள் மாணவர்களுடன் ஆசிரியர் தின விழாவினைச் சிறப்பாக கொண்டாடினர்.

05.09.2019 மற்றும் 06.09.2019 ஆகிய இருநாட்கள் அனைத்துத்துறை மாணவர்களுக்கான தொல்லியல் களப்பயிற்சிப் பட்டறை நான்காம் தமிழ்ச் சங்கம் செந்தமிழ்க் கல்லூரி, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையுடன் (இராமநாதபுரம்) இணைந்து நடத்தப்பட்டது. 05.09.2019 காலை 10.00 மணியளவில் நடைபெற்ற பயிலரங்கத் தொடக்கவிழாவிற்கு சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை தாங்கினார். கவிஞர் மூரா அவர்கள் சிறப்புரை ஆற்றினார். முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் வரவேற்புரை ஆற்ற. உதவிப் பேராசிரியர் முனைவர் பூ.பூங்கோதை நன்றி தெரிவித்தார். முதல் அமர்வில் "தொல்லியல் அகழாய்வுகள் - ஓர் அறிமுகம்" என்ற பொருளில் இராமநாதபுரம் இராமலிங்கவிலாசம் அரண்மனை காப்பாட்சியர் திரு.பா.ஆசைத்தம்பி அவர்கள் கருத்துரை வழங்கினார். "தமிழ் பிராமி எழுத்துகளின் தோற்றம் - வளர்ச்சி-- பரவல்" என்ற பொருண்மையில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மேனாள் இயக்குனர் முனைவர் சொ.சாந்தலிங்கம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இரண்டாம் அமர்வில் "வட்டெழுத்தின் தோற்றமும் வளர்ச்சியும்" என்ற பொருளில் மதுரை மாவட்டக் காப்பாட்சியர் முனைவர் மீ.மருதுபாண்டியன் அவர்கள் கருத்துரை வழங்கினார். "சங்க இலக்கியத்தில் தொல்லியல் கூறுகள்" என்ற பொருளில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக இந்திய மொழியியல் புலம் மற்றும் ஒப்பிலக்கியப்பள்ளித் துறைத்தலைவர் பேராசிரியர் முனைவர் ச.கவிதா அவர்கள் சிறப்புரை ஆற்றினார். பயிலரங்கின் இரண்டாம் நாள் நிகழ்வாகக் களப்பயிற்சி இராமநாதபுரம் இராமலிங்கவிலாசம் அரண்மனையில் சங்கத் தலைவர் மாட்சிமை தங்கிய முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி மற்றும் கல்லூரிச் செயலர் இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி ஆகியோர் தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கினர். மாலையில் தொல்லியல் சான்றாகத் திகழும் கீழடி

அகழாய்வுக் களப்பயிற்சியில் சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் பயிலரங்கப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். தொல்லியல் பயிலரங்கினை உதவிப் பேராசிரியர்கள முனைவர் பூ.பூங்கோதை மற்றும் முனைவர் ஜெ.போ.சாந்திதேவி ஒருங்கிணைத்தனர். உதவிப் பேராசிரியர் முனைவர் பா.நேருஜி இணை ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

14.09.2019 அன்று மதுரைக் கல்லூரியில் 150ஆவது காந்தி ஜெயந்தி விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்ட 10 போட்டிகளில செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் பேச்சு, கவிதை, கட்டுரை, வினாடிவினா, ரங்கோலி, பாடல், பயனற்ற பொருளிலிருந்து கலைப்பொருள் செய்தல், குறுநாடகம், மௌன நாடகம் ஆகிய 9 போட்டிகளில் பங்கேற்று பரிசுகள் வென்றனர்.

16.09.2019 அன்று முற்பகல் 10.30 மணியளவில் மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தின் 119ஆவது ஆண்டு தொடக்கவிழா நடைபெற்றது. சங்கத் தலைவர் மாட்சிமை தங்கிய முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி அவர்கள் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி, சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதல்வர் கி.வேணுகா அனைவரையும் வரவேற்றார். சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் இரா.இளங்குமரனார் சிறப்புரையாற்றினார். மதுரை பாராளுமன்ற உறுப்பினர் திரு.சு.வெங்கடேசன் அவர்கள் தமது உரையில், "கடந்த நூறு ஆண்டுகளில் மதுரைக்குப் பெருமை சேர்த்த ஒரே நிறுவனம் நான்காம் தமிழ்ச் சங்கம் மட்டுமே. மதுரை, தமிழ், தமிழின் பெருமை இவை மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் வைத்து எண்ணப்பட வேண்டியவை. பல பல்கலைக்கழகங்கள் செய்த சாதனைகளை இந்த தமிழ்ச் சங்கம் செய்துள்ளது. கல்வி சார்ந்த தமிழ்ப் பணியின் தலைமையகமாக தமிழ்ச் சங்கம் திகழ்கிறது. இங்குள்ள பாண்டியன் நூலகத்தைப் போல வேறு சிறப்பான நூலகங்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. வேறு எங்கும் கிடைக்காத அரிய நூல்களின் பெட்டகமாக இந்நூலகம் செயல்படுகிறது. பல்வேறு தமிழ் ஆளுமைகள் பணியாற்றிய புனித மண் இது என்பதை மாணவர்கள் உணர்ந்து கல்வி கற்க வேண்டும்" என்று பேசினார். துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் நன்றி கூறினார்.

20.09.2019 அன்று முற்பகல் 11.00 மணியளவில் மகளிருக்கான சுகாதாரம் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது. அம்பாத்துரை பெல்லா ப்ரீமியர் ஹேப்பி ஹைஜீன் கேர் (பி.)லிட் நிறுவனப் பயிற்சியாளர் பவித்ரா அவர்கள் சிறப்புரை வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைக் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி மற்றும் முனைவர் பா.நேருஜி ஆகியோர் செய்திருந்தனர்.

21.09.2019 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பாக நடைபெற்ற இராமேஸ்வரம் கடற்கரையினைத் தூய்மைப்படுத்தும் பணியில் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் 20 பேர் மற்றும் நாட்டுநலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் பா.நேருஜி ஆகியோர் பங்கேற்றனர்.

24.09.2019 அன்று முற்பகல் 11.00 மணியளவில் புவி வெப்பமயமாதல் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது. துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைக் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி மற்றும் முனைவர் பா.நேருஜி ஆகியோர் செய்திருந்தனர்.

26.09.2019 அன்று முற்பகல் 11.00 மணியளவில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் கவிமணியின் வாழ்க்கை வரலாறு மற்றும் தமிழ்ப் பணிகள் குறித்து மாணவர்களுக்கு விரிவாக எடுத்துரைத்தார். முன்னதாக கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் புகைப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

30.09.2019 அன்று முற்பகல் 10.30 மணியளவில் உலக மொழிபெயர்ப்பு நாள் சிறப்புச் சொற்பொழிவு கல்லூரி வைரவிழா அரங்கில் நடைபெற்றது. மொழிபெயர்ப்பாளர் மற்றும் பதிப்பாளர் கே.வி.சைலஜா அவர்கள் சிறப்புரையாற்றினார். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் சா.விசயஇராசேசுவரி நோக்கவுரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் வரவேற்புரையும் துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் நன்றியுரையும் வழங்கினர்.

நவம்பர் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

பரிதிமாற்கலைஞர்
(நவ.2)

சோமலே
(நவ.4)

கி.வா.ஜகந்நாதன்
(நவ.4)



தமிழ்நாடன்
(நவ.9)

சங்கரதாசு சுவாமிகள்
(நவ.13)



யாழ்ப்பாணம் ஆறுமுக
நாவலர்
(நவ.16)

வ.உ.சி
(நவ.18)

அ.சிதம்பரநாதனார்
(நவ.22)



தனுஷ்கோடி ராமசாமி
(நவ.25)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**
முனைவர் திரு தி.முருகரத்தினம்

முனைவர் திரு. **இராம.சுந்தரம்** முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **ம.திருமலை** முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **இ.மறைமலை** முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **செ.கந்தசாமி** முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு** முனைவர் திரு **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

தமிழ்ச்சங்க மாதிரித் தேர்வு அறிவிப்பு

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தால் 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஒவ்வொரு ஆண்டும் பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு அரசுப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறவும், கூடுதல் மதிப்பெண்கள் பெறவும் வழிகாட்டியாக தமிழ்ப்பாடம் மாதிரித் தேர்வு சங்கத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

கடந்த ஆண்டு முதல் மாநில பாடத்திட்டத்தில் கூடுதலாக பதினொன்றாம் வகுப்பிற்கும், மத்திய பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்பிற்கும் மாதிரித் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. இத்தேர்வில் கலந்து கொள்ளும் மாணாக்கர்களுக்கு சங்கத்தால், சான்றிதழும் அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டு வருகிறது. இச்சான்றிதழ் மாணாக்கர்களுக்கு எதிர்காலத்தில் பெரும் பயனுள்ளதாக இருக்கும். இந்த ஆண்டிற்கான சங்கத் தேர்வுகள் மாநில மற்றும் மத்திய பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்பிற்கு 11.01.2020-ஆம் நாளன்றும், பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்கு 10.01.2020-ஆம் நாளன்றும் நடைபெறவுள்ளது. மாணாக்கர்கள் அனைவரும் இத்தேர்வில் கலந்துகொண்டு பயன்பெற அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்**, 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **செந்தமிழ் அச்சகம்**, 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1